ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2363/73 - 2023 දෙසැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2023.12.22
*2363/73 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 11/2023*

**2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள்

*2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள்.*

கலாநிதி **விஜயதாச ராஜபக்ஷ** (சனாதிபதி சட்டத்தரணி),
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, திசெம்பர் 22.*

1A - G 41099 — 31 (2023/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**வழிகாட்டுநெறிகள்**

1. இவ்வழிகாட்டுநெறிகள், சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தலுக்கான வழிகாட்டுநெறிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. எவரேனுமாள், அத்தகைய ஆள் -

(அ) இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியொருவராகவிருப்பின் ;

(ஆ) உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியொருவராக நிரலிற் சேர்க்கப்பட்டதிலிருந்து இருபது ஆண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு அறிவுறுத்தும் சட்டத்தரணியொருவராக முனைப்பான தொழிலிருப்பவராகவிருப்பின் ;

(இ) சட்டத்தொழிலில் உயர் புகழை அடைந்திருப்பதுடன் உயர் நடத்தை தராதரங்களையும் தொழில் நேர்மையினையும் பேணியிருப்பவராகவிருப்பின் ;

(ஈ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றவியல் தவறுக்கு குற்றவாளியாகக் காணப்படாதவராக விருப்பின் ;

(உ) 1988 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற (சட்டத்தரணிகளது நடத்தை மற்றும் ஒழுக்கம்) விதிகள் மற்றும் 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எவையேனும் தொழிலாண்மைசார் துர்நடத்தைகளுக்கு குற்றவாளியாகக் காணப்படாதவராகவிருப்பின் ;

(ஊ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தினால் அல்லது இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் அவருக்கு எதிராக செய்யப்படும் ஏதேனும் ஒழுக்காற்றுக் கட்டளைக்கு எந்நேரத்திலும் ஆளாகாதவர் மற்றும் ஏதேனும் நீதிமன்றத்தினால் தொழிலாண்மைசார் துர்நடத்தைகளுக்கு குற்றவாளியாக் காணப்படாதவர் அத்துடன் இலங்கையின் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது சபையினால் நீதிமன்ற அவமதிப்புக்காக குற்றஞ்சாட்டப்படாதவராகவிருப்பின் :

ஆயின், இப்பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறினை உள்ளடக்காது ; அத்துடன்

(எ) நன்னடத்தைகளும் புகழும் வாய்ந்த ஆளாகவிருப்பவராகவிருப்பின்,

2023 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளிப்பதற்காக கவனத்திலெடுப்பதற்கு சனாதிபதிக்கான செயலாளருக்கு விண்ணப்பமொன்றினைச் செய்யலாம்.

3. சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பு அளிக்கப்படுகின்ற சட்டத்தரணிகளின் பெயர்கள் வர்த்தமானியிலும் சனாதிபதி செயலக இணையத்தளத்திலும் வெளியிடப்படுதல் வேண்டும்.

4. 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 2363/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டத்துக்கான வழிகாட்டுநெறிகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

EOG 12-0349

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.